**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**P.W.1**

**MCOP No. 99/2023**

**Name** : **சம்பூர்ணம்**
**Father's Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 24.04.2025.**

**ம.சா.1 முதல் விசாரணை:-**

எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இம்மனுவின் மனுதாரர்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 28.04.2023 | முதல் தகவல் அறிக்கை | வலைதள நகல் |
| ம.சா.ஆ.2 | 28.04.2023 | ஆத்தூர் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றிதழ் | வலைதள நகல் |
| ம.சா.ஆ.3 | 13.05.2023 | ஆத்தூர் அரசு மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| ம.சா.ஆ.4 | 29.04.2023 | சம்பவ இடத்தின் மாதிரி வரைப்படம் | வலைதள நகல் |
| ம.சா.ஆ.5 | 08.05.2023 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | வலைதள நகல் |
| ம.சா.ஆ.6 | 07.06.2023 | இறுதி அறிக்கை | வலைதள நகல் |
| ம.சா.ஆ.7 | 22.11.2017 | இரண்டு சக்கர வாகனத்தின் ஆர்.சி காப்பி | ஒளி நகல் |
| ம.சா.ஆ.8 | 22.10.2022 | இன்சுரன்ஸ் பாலிஸி காப்பி | ஒளி நகல் |
| ம.சா.ஆ.9 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை | ஒளி நகல் |
| ம.சா.ஆ.10 | -- | மருத்துவ பில்கள் - 6 (ரூ. 3148) | அசல் |

ஆக குறியீடுசெய்யப்படுகின்றன. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:-**

1) என்னுடைய வருமானம், வேலை குறித்து எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 18 ஆயிரம் சம்பாதித்து வருதவாக சொல்வதற்கு எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லும் சாலை கிழ மேல் சாலை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தான் சாலையில் வரும் போக்குவரத்தை கவனிக்காமல் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி கவனிக்காமல் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2) ம.சா.ஆ.4 வரைப்படத்தில் பாதையை கடக்க கூடிய Zebra crossing அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. வாகனம் வருவதற்கு முன்பே நான் சாலையை கடந்து வடக்கு பக்கம் வந்துவிட்டேன். நான் மனுவிற்காக சாலையில் வடக்கு பக்கம் கடந்து விட்டேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 மாதிரி வரைப்படத்தில் மேற்படி விபத்து சாலையின் வடது புறம் நடந்தாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) விபத்து நடந்து உடன் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அன்றே சிகிச்சை எடுத்துக்கொண்டேன். 28.04.2023 ல் சிகிக்சைக்கு சேர்ந்து 13.05.2023 சிகிச்சை பெற்று வந்துவிட்டேன். அதன் பின்னிட்டு நான் தொடர் சிகிச்சை எடுத்துகொண்டதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசாங்க மருத்துவமனையில் எனக்கு முறையாக சிகிச்சை அளித்ததால் எனக்கு தற்போது எவ்வித நிரந்தர ஊனமும் இல்லை என்றால் சரியல்ல. என் மீது மோதிய இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் இளவர் என்பதால் விபத்து சமயத்தில் அவருக்கு எவ்விதமான ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் அவர் பாலிசி விதிமுறைகளை மீறி உள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இந்த விபத்திற்கு எவ்வித இழப்பீடும் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் தரப்பு ம.சா.ஆ.7ல்

இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் இளவர் என்பதால் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இந்த விபத்திற்கு எவ்வித இழப்பீடும் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

4) இந்த விபத்திற்கு நானும் ஒரு காரணம் என்றும், சாலையில் வரும் போக்குவரத்தை கவனிக்காமல் நான் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், எனவே என்னுடைய கவன்க்குறைவும் இந்த விபத்திற்கு காரணம் என்பதால் அதை இழப்பீட்டில் இருந்து கழிக்க வேண்டும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 மருத்துவ பில்களுக்கும், விபத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அவை பரிசோதனைக்கு உட்பட்டவை என்றால் சரியல்ல.

5) மோட்டார் வாகன சட்டத்திற்கு புறம்பாகவும், பாலிசி விதிமுறைகளை மீறி இரு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் இல்லாத இளவரால் ஓட்டப்பட்டுள்ளதால் மேற்படி விபத்தில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும், 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S
Date: 2025.04.24 18:23:47 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**